**தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவகம்**

---

**1. நிதிசார் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுகாமை**

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல 18 இன் பிரகாரம், சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட நாள் முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் போது கையேற்கப்பட்டிருந்த ரூபா 16,408,695 தொகையான நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே நடைமுறை வேலைக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள நீர்கொழும்பு விடுதிக் கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 429,612 தொகை பெறுமானத்தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க மூலதன மானியமாக நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 37,960,838 தொகையான மானியங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் கணக்கிடப்படுவதற்கும் அவசியமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 17 பேரேட்டுக் கணக்குகளில் ரூபா 60,629,405 தொகையான கணிப்பீட்டுத் தவறுகள் காணப்பட்டன.

(ஆ) மூன்று கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 95.182,149 தொகையான கடந்த ஆண்டின் இறுதியில் முன்கொண்டுவரப்பட்ட மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக பேரேட்டில் பதியப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துக் கைதவிர்ப்பின் போது அது தொடர்பான திரண்ட பெறுமானத்தேய்வும் சொத்துக்களின் விற்பனையினால் பெறப்பட்ட பணமும் அச் சொத்தின் கிரயத்திற்கு சீராக்கப்படுவதனால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் கணக்குகளின் மூலம் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக சொத்துக்கள் விற்பனையினால் பெறப்பட்ட ரூபா 474,346 தொகையான மொத்த தொகையும் மீளாய்வாண்டின் வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) செயலமர்விற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,975,908 தொகையான செலவினம் முதலீடாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 126,531 தொகையான இனங்காணப்படாத ஓர் செலவு மீதியினை சரியாக இனங்கண்டு சீராக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான ரூபா 728,561 தொகையான தொங்கல் மீதிக்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) இறுதிக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் தொங்கல் கணக்கு மீதியாக ரூபா 602,030 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டு மீதி அடங்கலாக பேரேட்டின் இறுதி வரவு மீதிக்கும் செலவு

மீதிக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 83,651,159 ஆகக் காணப்பட்டது.

(எ) 09 நாட்குறிப்புகளின் மூலம் நிதிக்கூற்றுக்களின் தரவுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த மாற்றங்களின் பெறுமதி ரூபா 21,273,214 ஆன போதிலும் அந் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் பேரேட்டு மீதிகள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பல வருட காலமாக தொடர்ந்து நிலவிவரும் ரூபா 7,752,204 தொகையான 07 செயற்பாடற்ற சொத்துக்களின் மீதிகளையும் ரூபா 1,168,298 தொகையான 04 செயற்பாடற்ற பொறுப்புக்களின் மீதிகளையும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ரூபா 127,808,267 கூட்டுமொத்தமான பின்வரும் 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக அவை ஒவ்வொன்றிற்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யவோ/ மெய்மையாய்வு செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 95,839,673 | நிலையான சொத்துப் பதிவேடு |
| பதிவேட்டுப் பொருட்கள் | 196,598 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை. |

| | | |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் | 1,511,281 | பட்டோலைகள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| கடன்பட்டோர் | 10,544,517 | |
| ஊழியர் கடன் | 4,581,909 | |
| வங்கி மீதி | 6,136,324 | இணக்கக் கூற்றுக்களும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் |
| ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகள் | 4,886,577 | கொடுப்பனவு தொடர்பான கோவைகள் |
| ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவுகள் | 1,224,038 | |
| இல – 02 விடுதி திருத்தங்கள் | 2,887,350 | உடன்படிக்கை, தொழிநுட்ப உத்தியோகத்தரின் சான்றிதழ் |

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்காக விநியோகிக்கப்பட்ட முறையே 11 மற்றும் 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2011 மே 31 வரையும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றின் கணிப்பிடப்படக் கூடிய பெறுமதி ரூபா 15,675,055 ஆகும்.

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|---|
| | | **நிதிப் பிரமாணம்** | |
| (அ) | (i) | நி.பி. 135 | நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரம் கிரமமான முறையில் மீளாய்வு செய்யப்பட்டு அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நி. பி 371 (2)(ஆ) உப பந்தி | 24 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 இற்கு மேற்பட்ட ரூபா 1,636,771 மொத்த தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| | (iii) | நி.பி. 395 (ஈ) உப பந்தி | ஒவ்வொரு மாதத்திற்காகவும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்திடம் காணப்பட்ட 02 வங்கிக் கணக்குகளுக்காக எந்த மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **கொள்வனவு நடைமுறை விதிக்கோவை** | | |
| | 42(இ) உப பந்தி | | நடப்பாண்டின் போது கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருட்களும் சேவைகளும் தொடர்பாக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | |
| | (i) | 5.2.6 ஆம் உப பந்தி | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானச் செலவினக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலான பாதீடிடப்பட்ட ஐந்தொகையும் தயாரிக்கப்பட்டு பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | 6.5.1 ஆம் உப பந்தி | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வருடாந்த வரைபு அறிக்கை, வரிசை அமைச்சிற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குமான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்காக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 7.4.1 உப பந்தி | ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் 2009 ஏப்ரல் 04 ஆம் திகதி முதல் 2011 மே 31 கணக்காய்வுத் திகதி வரையிலும் அக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | 7.4.2 உப பந்தி | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 நவம்பர் 25 ஆம் திகதிய 20/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>-----------------------------------------------<br>04 மற்றும் 06 ஆம் உப பந்திகள் | புத்தகங்களின் கொள்வனவிற்காக ஆண்டின் போது வழங்கப்படும் விசேட முற்பணம் வழங்கப்பட்ட ஆண்டின் போதே அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 92,700 தொகையான 2010 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலவிய மீதிகளில் ஆண்டின் போதான அறவீடு ரூபா 2,000 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதி மீதி ரூபா 292,200 ஆகக் காணப்பட்டது. |
| (எ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவனத்தின் செயற்பாடுகள் ரூபா 13,640,675 ஆன பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 19,148,559 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 5,507,884 ஆன அதிகரிப்புக் காணப்பட்டது. பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 4,325,988 ஆல் அதிகரித்திருந்தமையே இச் சாதகமான முரண்களுக்குப் பிரதான காரணமாகியிருந்தது.

**2.2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.2.1 செயலாற்றல்**

எழுத்து மூலக் கோரல்கள் விடுக்கப்பட்ட போதிலும், நிறுவகத்தின் பௌதீகச் செயற்பாடுகளுடன் தொடர்பான விபரம் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் மீளாய்வாண்டின் போது இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செயலாற்றலுடன் ஒப்பிட முடியாதிருந்தது.

**2.2.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்குளி இல. 02 விடுதிக் கட்டிட பழுதுபார்த்தல்கள்

(i) மேற்குறித்த ஒப்பந்தத்திற்குரிய ஆவணங்களின் மூலப் பிரதிகள் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான ஆணைக்குழு உத்தியோகத்தர்களினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை கோவையின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட போதிலும் அந் நிறுவகத்திற்கு கோவைகள் கையளிக்கப்பட்டமை தொடர்பாக முறையான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பழுதுபார்த்தலுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் ரூபா 124,427 தொகையான பிடித்துவைத்தல்கள் (Retention) கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட அவ் அதிகாரச்சட்டத்தின் 26 (அ) பிரிவின் பிரகாரம் வழங்கல்கள் அடிப்படையிலான ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 380,238 தொகையான பெறுமதி சேர் வரியில் 33 1/3% ஆன ரூபா 126,746 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக உரிய பட்டியல்களில் இருந்து கழிக்கப்பட்டு பிடித்து வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 281,298 தொகையான மேலதிக வேலைகளுக்காக அளவைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.2 உப பிரிவின் பிரகாரம் வேலை பூர்த்தியடைந்தமை தொடர்பாக நிறுவகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் சான்றுபடுத்தியிருக்கவில்லை.

**2.2.3 நட்டங்களும் இழப்புகளும்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ரூபா 72,222 தொகையான மிகை அறவீடு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நாரா நிறுவகத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கும் காரியாலயத்திற்குரிய மின்சாரப் பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வது தாமதித்தன் காரணமாக அடிக்கடி மிகையறவீடுகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் தெரிவுக் கணக்காய்வு செய்யப்பட்ட 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காக மாத்திரம் ரூபா 91,498 தொகையான மிகை அறவீடுகள் செலுத்தப்பட்டிருந்தன.

**2.2.4 வாகனப் பயன்பாடு**

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல வருடங்களாகக் காணப்பட்ட மீண்டும் பழுதுபார்க்கப்பட முடியாத, துருப்பிடித்த 04 வாகனங்களையும் சுனாமிப் பேரழிவினால் சேதமுற்றிருந்த 06 ஆண்டுகள் பழமைவாய்ந்த 03 வாகனங்களையும் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படக் கூடிய 04 வாகனங்கள் பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அரசாங்கத் தொழிற்சாலைக்குப் பழுதுபார்க்கப்படுவதற்காகக் கையளிக்கப்பட்ட ஓர்

வாகனத்தின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்கையிலும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிராமையால் 15 மாதங்கள் தொழிற்சாலையில் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) உலக உணவு மற்றும் கமநல அமைப்புகளினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 05 வாகனங்களினதும் கடற்றொழில் அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற ஒரு வாகனத்தினதும் உரிமை நிறுவகத்திற்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடமும்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 112 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டதுடன் இதில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 02 பதவிகளும், கல்விசார் பதவியணியில் 27 உயர் பதவிகளும் நிலவின.

(ஆ) காரியாலய உதவி உத்தியோகத்தர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 20 ஆன போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 50 ஆகக் காணப்பட்டது. இம் மிகையான 30 உத்தியோகத்தர்களில் 27 பேர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கான சம்பளமாக ரூபா 5,598,720 தொகை 2010 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. இம் மேலதிக ஊழியர் ஆட்சேர்ப்பிற்காக 2006 ஏப்ரல் 10 ஆம் திகதி முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 28 இன் பிரகாரம் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கூட்டுத்திட்டம்

---

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உப பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் போதான செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்று 2008 -2011 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, எய்தப்பட வேண்டிய இலக்குகளின்

பணப் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிராமையால் வருடாந்த முன்னேற்றத்தை பண ரீதியாக மதிப்பிடுவதற்கு முடியாதிருந்தது.

**2.2.7 பாதீட்டு கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் போது பின்வருமாறு பாதிடப்பட்ட மீண்டெழும் செலவினம் தொடர்பாக ரூபா 9,964,852 தொகையான கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முரண்கள் நிலவின. இதன் பிரகாரம், வருடாந்த பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

| செலவின விடயம் | பாதீடிடப்பட்டது | உள்ளபடியானது | முரண்கள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளணி ஊதியம் | 56,385,000 | 62,099,555 | (5,714,555) |
| போக்குவரத்துச் செலவினம் | 425,000 | 1,241,145 | (816,145) |
| வழங்கல்கள் | 1,400,000 | 2,495,395 | (1,095,395) |
| பராமரிப்பு | 715,000 | 1,078,790 | (363,790) |
| ஒப்பந்த சேவைகள் | 5,025,000 | 8,112,345 | (3,087,345) |
| பயிற்சி நடவடிக்கைகள் | 6,860,000 | 5,197,850 | 1,662,150 |
| ஏனையவை | 1,815,000 | 2,364,772 | (549,772) |
| | | | 9,964,852 |

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) சொத்துக்கள் கட்டுப்பாடு
(உ) திட்டத் தயாரிப்பு
(ஊ) வழங்கல்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு